15.12.2017

தி இந்து
தமிழால் இணைவோம்

# வானிலை முன்னறிவிப்பு: தமிழகம் புதுவையில் சில இடங்களில் மழை வாய்ப்பு



அடுத்த 24 மணி நேரத்தில் தமிழகம் மற்றும் புதுச்சேரியில் ஓரிரு இடங்களில் இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் கூறுகையில்,

"குமரிக் கடல் பகுதியில் நிலவிய வளிமண்டல மேலடுக்கு சுழற்சி மாலத்தீவு மற்றும் லட்சத்தீவை ஒட்டிய பகுதியில் நிலவுகிறது. அதன் தாக்கத்தால் தமிழகத்துக்கு மழை கிடைக்க வாய்ப்பில்லை.

மேலும் வெப்பச் சலனம் காரணமாக அடுத்த 24 மணி நேரத்தில் தமிழகம் மற்றும் புதுச்சேரியில் ஓரிரு இடங்களில் இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும். சென்னையில் வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும்.

வெள்ளிக்கிழமை காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் வால்பாறையில் 1 செமீ மழை பதிவாகியுள்ளது" என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

## தென் மாவட்டங்களில் இன்று மழை பெய்யும்



சென்னை வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் கூறியதாவது:

இலங்கை மற்றும் அதை ஒட்டியுள்ள பகுதியில் நிலவிய புதிய வளிமண்டல மேலடுக்கு சுழற்சி, தற்போது குமரிக் கடல் பகுதியில் நிலவி வருகிறது. இதன் காரணமாக அடுத்த 24 மணி நேரத்தில் தென் தமிழகத்தில் சில இடங்களிலும், வட தமிழகம் மற்றும் புதுச்சேரியில் ஓரிரு இடங்களிலும் இடியுடன் கூடிய மழை பெய்ய வாய்ப்புள்ளது. சென்னையில் வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகாலை நேரங்களில் சில இடங்களில் பனிப்பொழிவு இருக்கக்கூடும்.

வியாழக்கிழமை காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக கன்னியாகுமரி மாவட்டம் மயிலாடியில் 7 செமீ மழை பதிவாகியுள்ளது.

இவ்வாறு அவர்கள் தெரி வித்தனர்.